Family Planning Programme

*408 *Q.*—Thiru K. VINAYAKAM
Thiru S. SIVASUBRAMANIAN
Thiru V. K. KOTHANDARAMAN
Thiru L. BALARAMAN
} Will the Hon.
the Minister for Public Health be pleased to state—

(*a*) the policy and attitude of the Government towards the increasing population in the State ; and

(*b*) whether it is proposed to intensify the family planning ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ), (இ) : நமது பொருளாதார வளர்ச்சியுடன் பொருந்தும் அளவில் மக்கட் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதே அரசின் கொள்கையாகும். அந்த அளவில் அரசு குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை முனைந்து செயல்படுத்தக் கருதியுள்ளது.

திரு. கே. விநாயகம் : ஸார், ஆண்டுதோறும் நமது நாட்டிலே மக்கள் தொகை ஏறிக்கொண்டே வந்தும், அதைத் தடுப்பதற்குக் குடும்பக் கட்டுப்பாடு என்று சொல்லி எவ்வளவோ பிரசாரம் செய்தும் நம்மால் அந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியாத அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருப்பதால் நமது சர்க்கார் இந்தக் கொள்கையைத் தீவிரப்படுத்துவதற்கு என்ன ஆலோசித்துக் கொண்டிருக்கிறது ? இதிலே ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே அவைகளையெல்லாம் பற்றி அதிக அக்கறை காட்டாத கட்சி வந்த பிறகு இந்த முறைகளையெல்லாம் கிண்டல் செய்யாமல்—' the devices which the Government adopt for family planning ' நடைமுறையிலே அவைகளைப் பயன்படுத்தி மக்களுக்கு நன்மை செய்யத் தீவிர முயற்சியிலே இந்த ஆட்சி ஈடுபடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் குறிப்பிட்டது தவறான கருத்தாகும். இந்த அரசு கிண்டல் செய்வது கிடையாது. உறுப்பினருடைய கேள்விதான் கிண்டல் செய்வதாக அமைந்துள்ளது. அரசாங்கம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஸார், இந்தப் பொருளாதார வசதியைச் சிக்கனப்படுத்தும் முறையிலே இந்த முறையைக் கையாளுவதைவிட இன்னும் அதிகப்படியாகச் சிக்கனப்படுத்தக் கூடிய வழிகளும் உண்டு. நன்றாக இருக்கக் கூடிய எல்லோருக்கும் 30 ரூபாய் லஞ்சம் கொடுக்கக் கூடிய முறையில் ஆசை காட்டி அறுவை சிகிச்சை செய்வதை விட, ஆஸ்பத்திரிகளிலும் மற்றும் பல இடங்களிலும் லெப்ரஸி, டி.பி. போன்ற தொத்து வியாதிகளால் பீடிக்கப்பட்டவர்களுக்குப் பிறக்கிற குழந்தைகளும் இந்தத் தொத்து நோய்களால் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருப்பதால் அவர்களுக்குக் கட்டாய அறுவை சிகிச்சை செய்தால் அதனால் நன்மைகள் ஒன்றுக்குப் பத்தாக ஏற்படக்கூடிய நிலைமை உண்டு. அது போலச் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிட்டது போல லஞ்சம் என்பது இல்லை. உற்சாகப் படுத்துவதற்காகத்தான் கொடுக்கப்படுகிறதே தவிர—' as a sort of inducement ' லஞ்சமாகக் கொடுப்பது இல்லை. கனம் உறுப்பினர்களிடம் வேறு பல கருத்துக்கள் இருந்து அவைகளை அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தினால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இந்தக் திட்டத்தின் கீழ் மத்திய சர்க்காரிடமிருந்து மாநில சர்க்கார் வாங்கும் தொகை எவ்வளவு ? இதை அதிகமாக விரிவுபடுத்த இந்தச் சர்க்கார் ஏற்கெனவே விளம்பர அதிகாரிகளாக இருந்தவர்களை ஜில்லா அதிகாரிகளாக நியமிக்க உத்தேசித்திருப்பதாகத் தகவல் வருகிறது. அந்த மாதிரி எத்தனை அதிகாரிகளை நியமிக்க இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது பற்றிய விவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. கனம் உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துக் கொடுக்கப்படும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : ஸார், குடும்பக் கட்டுப்பாடு விஷயம் ரொம்பத் தீவிரமாக இருக்கிற இந்த யுகத்திலே, சில பத்திரிக்கைகளில் அதிகப் பிள்ளைகளைப் பெற்றால் பரிசு கொடுப்பதாகச் சொல்லுகிறார்களே, அந்த மாதிரிப் பத்திரிக்கைச் செய்தி போடக் கூடாது என்று கட்டுப்படுத்துவதைப் பற்றி இந்த அரசாங்கம் யோசிக்குமா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் உறுப்பினருடைய கேள்விக்கும் தொடர்பு இல்லை என்றாலும், அது போன்ற நிகழ்ச்சி இனி நடைபெறாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, is there any proposal under the consideration of the Government for legalising abortion by taking steps to amend the Indian Penal Code ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The matter is under consideration.

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் : தலைவர் அவர்களே, குடும்பக்கட்டுப்பாடுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலேயும் குடும்பக் கட்டுப்பாடு ஃபீல்டு வொர்க்கர்ஸை நியமனம் செய்திருக்கிறோம். அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்படுவதோடு, வாசக்டமி செய்து கொள்ளுகிறவர்களுக்கு ஒரு வார ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கொள்கை அடிப்படையில் 30 ரூபாய் அளிக்கப்படுகிறது. இந்தத் திட்டம் நல்ல முறையில் சிறப்பாக நடைபெறவேண்டும், பொது மக்கள் இதைக் கடைபிடிக்கவேண்டும் என்று இந்த உதவித் தொகையை அதிகப்படுத்தி கவர்ச்சி ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா? ஃபீல்டு வொர்க்கர்ஸுக்கு உதவித் தொகையை இன்னும் கூட்டிக் கொடுக்க சர்க்கார் உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. எம். சண்முகம் : தலைவர் அவர்களே, மூன்று குழந்தைகளுக்கு மேலே பெறக்கூடாது என்ற ஆலோசனையை மத்திய அரசு கூறியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இது பற்றி மத்திய சுகாதார அமைச்சர் அவர்கள் ஒரு திட்டமிட்டு எல்லா மாநிலச் சுகாதார அமைச்சர்களையும் அழைத்துப் பேசினார்கள். அவர்களும் சில கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். மூன்று குழந்தைகளுக்கு மேல் பெறக் கூடாது என்று சட்டம் போடுவது, அபார்ஷனை லீகலைஸ் செய்ய சட்டம் போடுவது, பணம் கொடுக்கும் முறையில் அதை அதிகப்படுத்தி அதிக உற்சாகப்படுத்துவது ஆகிய பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். மாநிலங்களைக் கலந்து ஒரு முடிவுக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. எம். மேத்தா : தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம் செய்யக்கூடியவர்களாக, குடும்பக்கட்டுப்பாடு சட்டதிட்டத்திற்குட்பட்டு 2, 3 குழந்தைகளைப் பெற்றவர்களை மட்டும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளவேண்டும் என்று சர்க்கார் உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப்பற்றி உரிய காலத்தில் ஆலோசிக்கப்படும்.

திரு. கே. பி. எஸ். மணி : இந்தக் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தில் இந்த மாகாணத்தில் மொத்தத்தில் 95 சதவிகிதம் ஆதிதிராவிட மக்களும், பாக்கியிருக்கிற வன்னியப் பெருமக்களும் தான் ஈடுபட்டிருக்கிறார்கள்

என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இப்படி ஒரு தனிப்பட்ட சமூகத்தினரை மட்டும் அறுவை சிகிச்சையில் ஈடுபடுத்துவதும், மற்றபடி முஸ்லிம் சமுதாயம், கிறிஸ்தவ சமுதாயம் கண்டிப்பாக மத ஆசாரத்தினால் இந்த அறுவை சிக்ச்சை செய்து கொள்ளாமல் இருப்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா? அம்மாதிரி சமுதாயத்தினரும் இந்த அறுவை சிகிச்சை செய்துகொள்ள நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், இந்த இரண்டு சமூகமும் குறைந்தது 50 வருஷ காலத்தில் அழிந்துவிடும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் பல தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரும் மட்டும் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்திற்கு ஆளாகிறார்கள் என்று சொல்வது சரியல்ல. ஜாதிமத வேறுபாடு இல்லாமல் எல்லா மதத்தினரும் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார். ஏற்கனவே இதே ஸெஷனில் இதே அசெம்பளியில் இந்த கேள்வி கேட்கப்பட்டு பதில் சொல்லப்பட்டது. இதே உபகேள்விகளும் கேட்கப்பட்டிருக்கின்றன. மறுபடியும் இதேமாதிரியாக கேள்விகள் கேட்பது சரிதானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதோடு துணை வினாக்களை நிறுத்திக் கொள்ளலாமா.?

எழுந்திருந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு கே. விநயகம் இறுதித் துணை வினாவைக் கேட்பார்.

திரு. மா. பா. சாரதி : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, உபகேள்விகள் கேட்பதற்காக பல பேர்கள் கையை தூக்கிக் கொண்டிருக்கும்பொழுது நண்பர் விநயகம் அவர்கள் மட்டும் எழுந்து நின்றுகொண்டு கேள்வி கேட்பதற்கு முந்திவிடுகிறார். அம்மாதிரி இல்லாமல், நீங்கள் பெயர் சொன்னதற்குப் பிறகு தான் எழுந்திருக்கவேண்டும் என்று உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, it is the duty of every Member who is anxious to put any question to draw the eye of the Speaker. Late marriages and less children are advocated by the Malthusean theory. Whereas Dr. Chandrasekhar, an expert on population problem, has been specially drafted on to the Central Cabinet to encourage family planning, what salutary steps have been taken by our State to respond to the call of the Centre to investigate the theory of late marriages and less children and is it in accordance with that theory that our Health Minister has not yet got married ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த வயதை உயர்த்தவேண்டும் என்ற கருத்து மத்திய அரசாங்கத்தினுடைய சுகாதார அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே இந்து திருமண சட்டத்தில் அப்படிப்பட்ட ஒரு கட்டுப்பாடு இல்லாத நிலை இருந்து, 1955—வது ஆண்டு சட்டத்தில் 15 வயது என்று குறிப்பிடப்பட்டது. அதற்கு முன்னாலே 1920-ம் ஆண்டில் சிறு குழந்தைகள் திருமணம் செய்துகொள்வதைத் தடுப்பதற்கு 16 வயது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதை 21 வயதாக ஆக்கவேண்டும் என்று மத்திய சர்க்கார் கருதுகிறது. இந்த அரசாங்கத்திடமிருந்து அதைப்பற்றி கருத்து கேட்கப்பட்டிருக்கிறது.

THE HON. THIRU C. N. ANNADURAI : Since my hon. Friend has raised the Malthusean theory, I want to refresh his memory and correct him. Malthuse said that there need not be birth

control because, when population increased, there would be war and pestilence and there would be natural reduction of population. But that is inhuman and merciless and that is why modern Governments are thinking in terms of controlling birth.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார், தலைவர் அவர்கள் ஒரு ரூலிங் கொடுக்க வேண்டும். தலைவர் அவர்கள், பெயரைச் சொன்ன பிறகு கேள்விகள் கேட்பதற்கு எழுந்திருக்க வேண்டும் என்று ரூலிங் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர்கள் கையை தூக்காமல் எழுந்திருந்தால், நாங்கள் கையை தூக்குவது தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கையை மட்டும் உயர்த்த வேண்டும். கையை உயர்த்துவதை இந்த வினாவிற்கு இதோடு நிறுத்திக்கொள்ளலாம்.

Rice seized at Boothapadi

*409 *Q.*—Thiru A. M. RAJA : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether a lorry load of rice was seized by the Tahsildar, Bhavani at Boothapadi on 18th May 1967 :

(*b*) whether it is a fact that the above lorry load of rice was released by the District Revenue Officer and the Collector to the owner ; and

(*c*) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) ஆம். லாரியிலிருந்து அரிசியை கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அதிகாரி உரிமையாளரிடமே திருப்பிக் கொடுத்துவிட்டார்.

(உ) ஒப்படைக்கும்படி உத்தரவிடப்பட்ட அரிசியை எச்சூழ்நிலைகளில் திருப்பிக் கொடுக்க நேர்ந்த தென்பது குறித்து விரிவாக விசாரணை செய்து, உடனடியாக அறிக்கை அனுப்பும்படிக் கோயம்புத்தூர் கலெக்டர் கேட்கப்பட்டுள்ளார்.

திரு. ஏ. எம். ராஜா : கலெக்டர், மாவட்ட வருவாய் அதிகாரி இருவரும் இதில் சம்பந்தப்பட் டிருக்கிறார்கள். உயர்மட்ட அதிகாரி ஒருவரை நியமித்து விசாரணை நடத்துவது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைத்தான் குறிப்பிட்டேன். கோயம்புத்தூரைச் சேர்ந்த டி. ஆர். ஓ. அவர்கள் ஏற்கனவே பறிமுதல் செய்யப்பட்ட இந்த லாரியை என்ன காரணங்களினால், என்ன அடிப்படையின் கீழ் விட நேர்ந்தது என்பதற்கான ஒரு விவரமான அறிக்கையை அரசாங்கம் கேட்டிருக்கிறது. அரசாங்கம், அவர் அந்த லாரியை விட்டதற்கு சரியான சமாதானம் இல்லை என்று கருதிய காரணத்தினால்தான், அதை அவர் அப்படி விடுவதற்கு என்ன நேர்ந்தது என்பதைப்பற்றி கலெக்டர் அவர்கள் மிக விரைவாக ஒரு அறிக்கை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட் டிருக்கிறார்.

வெள்ளிக்குறியிடப்படாத வி ா ள்

Corruption cases.

35 *Q.*—Thiru A. BALASUBRAMANIAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of corruption cases and the like against Government servants drawing less than Rs. 200 per month referred to the Disciplinary Proceedings Tribunal in Madurai District from 1964–65, up-to-date ;